# ★ பாதுகாப்பு வரி ஒரு வீதத்தால் அதிகரிப்பு!

(கொழும்பு)
இலங்கையில் அதிகரித்து வரும் போர்ச் செலவீனங்களை சமாளிக்கவும், போர் நடவடிக்கைளை தீவிரப் படுத்துவதற் மாக அரசு பாதுகாப்பு வரியை ஒரு சத வீதத்தால் அதிகரிக்கவுள்ளது. அதன் மூலம் முழு நாட்டையும் தொடர்ந்தும யுத்த நிலைக்கு உட்படுத்த அரசு முயறசித்து வருகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:
தற்போது 3.5 வீதமாக இருக்கும் பாதுகாப்புவரி இனி மேல் 4.5 வீதமாக அதிகரிக் கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. அதிகரிக்கப்படும் பாதுகாப்பு வரியினுல் கிடைக் கும் வருமானத்தைக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து கூடுத லான ஆயுதங்கள், வெடிமருந்

[2-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 25 இதழ் 124
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 08 - 6 - 1995

## சட்ட ஆலோசனைக்கு பிரபா விவகாரம்ஒப்படைப்பு

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும், அவரோடு மற்றிருவரையும் கைது செய்ய இந்தியா விடுத்த வேண்டுதலை சட்ட ஆலோசனைக்காக. சட்ட மா அதிமருக்கு நேற்று இலங் கைப் பாதுகாப்பு அமைச்சு அனுப்பியுள்ளது.
ராஜீவ் காந்தி கொலை வழக்கு சம்பந்தமாக கடந்த சனிக்கிழமை இந்தியா திரு. பிரபாகரனையும் மற்றிருவரை யும் கைது செய்து இந்தியா வுக்கு நாடு கடத்துமாறு இலங்கையை கேட்டிருந்தது.
இலங்கை சட்டவாக்கத் திற்கு இணங்க பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோலை ச..ட

[2ம் பக்கம் பார்க்க]

## ★ தாய் மண்ணை மீட்கும்

# மண்மீட்புப் போரில் ஈடுபட புலிகளுடன் இணைய அழைப்பு

## அரசியல்துறை அறிக்கை

(யாழ்ப்பாணம்)
சிங்களப்படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து எமது தாய் மண்ணை மீட்டெடுக்க வேண்டும்' அவ்விதம் ஒரு மண்மீட்புப் போரில் ஈடுபடுவதற்காக புலிகள் இயக்கத்துடன் இணைந்து கொள்வது எமது தேசியக்கடமை என்று எண்ணும் தேசாபிமான உணர்வுள்ள அனைத்து இளைஞர்களும், இளம் பெண்களும் எமது ஆட்சேர்ப்பு மையங்களுக்குச் சென்று தத்தமது பெயர்களை பதிவுசெய்து கொள்ளும்படி உரிமையுடன் அழைக்கின்றோம் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை பிரச்னையால் இந்தியாவில் தாக்கம்

(சென்னை)
இலங்கை இனப் பிரச்னையால் இந்தியாவில் பெருமதாக்கங்கள் ஏற்படுவதால் அப்பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமென இந்திய கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தாஸ் கூறியுள்ளார்.
தமிழ் நாட்டிற்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற் கொண்டு சென்னைவந்த வைஸ் அட்மிரல் தாஸ் பத்திரிகையாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அங்கு

[2-ம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவுக்கு போர் ஆலோசனை வெளிநாட்டு நிபுணர்கள் வருகை

[கொழும்பு]
ஜனாதிபதி சந்திரிகாவிற்கு பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்க வெளிநாட்டு இராணுவ நிபுணர்கள் குழு ஒன்று கொழும்புவந்துள்ளது.
இஸ்ரேல், பிரான்ஸ், அமெரிக்கா, சீனுவிலிருந்து 15 பேர் கொண்ட இராணுவ நிபுணர் குழு அவசர அவசரமாக கொழும்புக்கு வரவழைக்கப் பட்டுள்ளது. இதில் இஸ்ரேலை சேர்ந்தவர்கள் ஆறுபேர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிபுணர்கள் குழு படை நடவடிக்கை தொடர்

(9ம் பக்கம் பார்க்க)

## ★ பருத்தித்துறை

## இல. வங்கி கிளையை வேறிடத்திற்கு மாற்ற உத்தரவு

(நெல்லியடி)
பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளையை பாதுகாப்பின் நிமித்தம் உடனடியாக வேறிடத்துக்கு மாற்றுமாறு கொழும்பிலிருநது இலங்கை வங்கி தலைமையகத்தினுல் உத்தரவிடப்பட்டுள்ளது
சில தினங்களுக்கு முன்னர் இப்பணிப்புரை யாழ். தலைமையலுவலகம் ஊடாக பருத்தித்

[2ம் பக்கம் பார்க்க]

## பாரிய படை நடவடிக்கையை சந்திரிகா உறுதிப்படுத்துகிறுர்

(கொழும்பு)
இராணுவத்தினர்விரைவில் பாரிய படை நடவடிக்கை ஒன்றை விடுதலைப்புலிகளுக் கெதிராக மேற்கொள்ளவுள்ள தாக ஜனாதிபதி சந்திரிகாவும் கூறியுள்ளார்.
கடந்த வாரம் நடைபெற்ற பொ. ச. மு. தலைவர்களுக் கான வாராந்த கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா, விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறியுள்ளார்.
அரச படைகள் தமது நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு புலிகளை பலவீனப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு இருப்பதாகவும் கூறப்படுகிறது.
இதேவேளை வடபகுதி மீது பாரிய இராணுவ தாக்குதலை

(6ம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தமிழரின் வாகனத்திலேயே குண்டு வெடிக்கப்பட்டது

(கொழும்பு)
கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வாகனத் தரிப்பு இடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம் பவம் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்தியதில் முக்கிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்
குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தகவல் தருகையில்: இதற்குப் பயன்படுத்திய வானை இலங் கைத் தமிழர் ஒருவர் அண்

(6ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றின் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)
நாடாளுமன்றத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்குப் பின்பே நாடாளுமன்றத்திற்கான பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இனிமேல் எவரும் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு இரகசிய தகவல்களை அமைச்சர்களும் வழங்குகிறுர்கள்?

(கொழும்பு)
இராணுவ தந்திரோபாயங்கள் குறித்து அமைச்சர்கள் கூட விடுதலைப் புலிகளுக்கு இரகசியத் தகவல்களை வழங்கிவிடுவார்கள் என்ற சந்தேகம் அரசுக்கு எழுநதுள்ளதாக 'சண்டே ஐலண்ட்' கூறியுள்ளது.
இது பற்றி அப்பத்திரிகை மேலும் கூறுகையில்; கடந்த புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அமைச்சரவை கூடியது. தற்போதைய யுத்தம் குறித்தே அங்கு முக்கியமாக ஆராயப்பட்டது. எனினும் யுத்த தந்திரோபாயங்களை குறித்து ஆராயப்படவில்லை.
இதுபற்றி சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறுகையில்: இங்கு யுத்த தந்திரோபாயங்கள் பற்றி ஆராயப்படவில்லை. ஏனெனில் அமைச்சரவைக்குள் இருக்கும் சில சக்திகள் விடுதலைப் புலிகளுக்கு

(6ம் பக்கம் பார்க்க)

# வடக்கே சென்று திரும்பும் கப்பல்கள் மீது தீவிர சோதனை

(கொழும்பு)
வட பகுதியிலிருந்து கொழும்பு திரும்பும் உணவுக் கப்பல்கள் யாவும் மூன்று தினங்கள் மற்றொரு துறைமுகத்தில் வைத்து தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்பே கொழும்பு துறைமுகத்தினுள் நுழைய அனுமதிக்கப்படுகின்றன.

கப்பல்களில் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருக்லாம் என்ற அச்சம் காரணமாகவே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. பருத்தித் துறைக்கு பொருட்களை இறக்கச் செல்லும் கப்பல்களில் புலிகள் வெடிகுண்டை பொருத்தி விடுவார்கள் என்ற அச்சம் கராணமாகவே மூன்று நாட்கள் வேறு ஒரு துறைமுகத்தில் விடப்பட்டு கப்பல்கள் தீவிரமாக பரிசோதிக்கப்படுகின்றன.

இதேவேளை கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பு அதிதீவிரப் படுத்தப்பட்டுள்ளது, எங்குபார்த்தாலும் ஆயுதம் தரித்த கடற்படையினரே காணப்படுகின்றனர். துறைமுகத்தினுள் நுழையும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாகனமும் மிகத் தீவிரமாக பரிசோதிக்கப்படுகின்றன.

இதேவேளை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோகான் சமாசேகராக ஈரைநகர் கடற்படைத் தளத்திற்கு கடந்த வாரம் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு மூன்றுதினங்கள் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## மரணதண்டனை விதிப்புமுறை தென்னுபிரிக்காவில் நீக்கம்

(ஜொகனேஸ்பேக்)
தென்னுபிரிக்காவில் மரண தண்டனை விதிக்கப்படும் முறைநீக்கப்பட்டுள்ளது தென்னுபிரிக்க உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பதினொருபேர் இந்த முடிவை அறிவித்துள்ளனர்.

இதனுல் மரண தண்டனையை எதிர்நோக்கியிருந்த சுமார் 400 கைதிகளின் தண்டனை குறைக்கப் படவுள்ளது. -ரி

### இலங்கை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்:
இந்தியாவுக்கும் இலங்கைகுமிடையிலான தமிழ்ப் போராளிகள் நடமாட்டம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாக்கு நீரிணையில் இந்திய கடற்படையின் ரோந்து நடவடிக்கைக்கு இலங்கையும் நல்ல ஒத்துழைப்பு வழங்குகிறது. இதன் மூலம் அவர்களின் நடமாட்டங்களை பெருமளவில் கட்டுப்படுத்த முடியுமென நம்புகிறோம்.

தமிழகத்திலிருந்து மீன் பிடிக்கச் செல்லும் படகுகள் தினமும் சோதனையிடப்படுகின்றன. தமிழக கடற்கரையோரம் மிகவும் நீண்டு இருப்பதால் இது கடினமான காரியமாக இருந்த போதிலும் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன எனவும் கூறினுர். -சி

### சட்ட
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாஅதிபர் திணைக்களம் பரிசீலனை செய்தபின் அதற்கேற்ப தகுந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, -கே-சி

## இன்று

(யாழ்ப்பாணம்)
மானிப்பாயில் இயங்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கல்லூரி அதிபர் அருட்திரு. யஸ்ரின்ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

யாழ் வலயம் -2 கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். -170

0 0 0 0

(உடுவில்)
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் புதிய சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் இன்று 8 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு அதிபர் ந. ஜெயநாயகம் தலைமையில் நடைபெறும். -109

### பருத்தித்துறை
(1ம் பக்கத் தொடர்ச்சி)

துறை இலங்கை வங்கி பொது முகாமையாளருக்குத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினுல் இவ்வங்கி இங்கிருந்து மந்திகைச் சந்திக்கு மாற்றப்பட்டு மீண்டும் அண்மைக்காலமாக பருத்தித்துறை பழைய பேருந்து நிலையத்திற்கருகில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. 160-சி

### பாதுகாப்பு
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

துகள், ஹெலி கொப்டர்கள், மற்றும் போர்த் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இனிமேல் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தில், தற்போது பாதுகாப்புக்கென ஒதுக்கப்படும் 2500 கோடி ரூபாவை மேலும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதனை ஈடுசெய்வதற்காக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருட்களுக்கும் வரி அதிகரிக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது, கே-சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–06–08
வியாழன் இரவு

08-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 நோய்தீர்க்கும் மூலிகைகள்
08-20 உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் ''நாட்டினை வளமாக்குவோம்'' குறு நாடகம்
08-30 செய்திகள்
08-40 மொழியும் வாழ்வும் — (15)
08-50 எங்களின் தேசம்- (22)

1995–06–09
வெள்ளி காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–06-08
வியாழன் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05 02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும்
06-00 சிந்தனைக்கு சில விநாடிகள்
06-02 பொன்விளையும் பூமி
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 விளையாட்டு தொடர்பாக கேள்வி பதில்
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.


## வரி விளம்பரம்

சனிமாற்றமும் வியாழ வக்கிரமும்

2-6-95 சனிமாற்றமும், 4-8-95 வரை வியாழவக்கிரமும். எல்லா ராசிப்பலன்கள் ரூபா 10/- விற்பனையாகின்றது. பாடசாலை உபகரணங்களுக்கு துர்க்கா ஸ்ரோசனர்ஸ், சுன்னுகம்
[ஏ-1508]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பட்டப் பின் படிப்பிற்குப் பதிவு செய்தல் 1995

(கலாநிதி, முதுமெய்யியல்மானி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1994/1995ம் கல்வியாண்டில்பின்வரும் பாடநெறிகட்கு, பட்டப் பின் படிபபிற்காகத் தகுதி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

பொருளியல்,
கல்வியியல்,
புவியியல்,
இந்துநாகரிகம்,
அரசியல்,
கிறிஸ்தவ நாகரிகம்,
வரலாறு,
வர்த்தகம்,
தமிழ்,
மெய்யியல்,
சமஸ்கிருதம்,
மொழியியல்,
நுண்கலை,
நாடகமும் அரங்கியலும்
முகாமைத்துவம்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 20/- இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் ரூபா 10.50 பெறுமதியுள்ள முத்திரை ஒட்டிச்சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1995-06-30ம் திகதிக்கு முன்பாக உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 1995-06-30ம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1995-06-02
[ஏ-4979]

தவறிவிட்டது

அண்மையில் வல்லைப்பகுதியில் மினி பஸ் மீது எறிகணை வீச்சு நடாத்தப்பட்ட சமயம் அந்த பஸ்ஸில் பயணம் செய்த மாலிசந்தியைச் சேர்ந்த செல்வி தங்கராணி ஆகிய நான் கொண்டு வந்த திருமண வைபவ போட்டோக்கள் அடங்கிய அல்பம் அவ்விடத்தில்தவறிவிட்டது,

இதனைக் கண்டெடுத்தவர்கள்மந்திகைச்சந்தியிலுள்ள
பிரியா வீடியோ சென்ரரில்
ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(ஏ-4984)

புலோலி தெற்கு
சந்தா தோட்டம்ஸ்ரீமுதலி (மஞ்ஞன்மணி)
அம்பாள்
ஆலய தருமபரிபாலன சபை

முக்கிய அறிவித்தல்

பேரன்புடையீர்!

மேற்படி ஆலய தருமபரிபாலன சபையின் நடப்பாண்டு நிர்வாகிகளாக நாம் கடந்த தை மாதம் பொதுமக்களினுல் தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது ஆலய நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருக்கின்றோம்.

இதேவேளை வேறு சிலர், தாம் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளதாக, பொதுமக்களுக்கு தெரியப்படுத்தி மக்களிடமிருந்து பண உதவிகளைப் பெற்று வருவதாக அறிகின்றோம்.

எனவே எம்மீது களங்கம் ஏற்படுத்த முனையும் இவர்களுக்கு, எவ்வித பண உதவிகளையும் நல்க வேண்டாமென மேற்படி ஆலய தரும பரிபாலன சபையின் சார்பில் பணிவுடன் அறியத்தருகின்றோம்,

சி. மாாக்கண்டு
தலைவர்

கே. இ. கிருபாகரசூரியன்
கௌரவ செயலாளர்,

07-06-1995

ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய
தருமபரிபாலன சபை
புலோலி தெற்கு.

(சி-1509)

கோண்டாவில் தில்லையம்பதியில்
(இன்று) வசந்த உற்சவ திருவிழா



ராகம்: ரஞ்சனி
அபிராமிப் பட்டருக்கே அருள்மழை சொரிந்தவளே
ஆடிப்பூரத்திரு நாளில் கன்னிகையாய்த் திகழ்ந்தவளே
தில்லையம்பதி நாயகியே சிவகாம சுந்தரியே
வைகாசி வசந்த நாளில் ஜோதி வடிவானவளே
சிவபெருமான் மகிழும் சிவேஸ்வரி ரஞ்ஜனி
தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா தேவி

ஆக்கம்;
கவிமாமணி ந. வீரமணிஐயர்
இரவு 7-30 மணி:
பிட்ஷாடனர் மகிமை
என்னும் பொருள் பற்றி
சிவநெறித் தொண்டன்
செ சத்தியமூர்த்தி (ஆசிரியர்)
சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்
எ-4971

### மணிவாக்கு

பிறர் குற்றங்களைக் கண்டு நகைக்கக் கூடாது, நம்மிடம் அதைவிட ஆயிரம் மடங்கு குற்றம் இருக்கலாம்.

— டிரேட்ஸ்.

## நமது நோக்கு

### மாணவர் எழுச்சி

மாணவர் எழுச்சிநாள் என்றுமில்லாத வகையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் உணர்வு பூர்வமாக பங்கு பற்றினர், ஒரு தேசிய விழாப்போன்று அது கொண்டாடப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த எழுச்சி எதைக் காட்டுகிறது. கடந்த காலத்தில் சிறு வயதுப் பருவத்திலேயே ஆயுதம் தாங்கி சிங்கள அடக்கு முறைக்கெதிராகப்போராடிய மாணவர்கள் தங்கள் உடல் உயிர் இன்பவாழ்க்கைமுதலியவற்றைஅர்ப்பணித்து தமிழீழத்தை கட்டி எழுப்பி அது பூரணத்துவம் அடையும் தறுவாயில் இன்றைய இளைஞர்களின் கைகளுக்குப் பாரங் கொடுக்ககூடிய நிலைக்கு கொண்டு வந்துள்ளார்கள். இன்றைய மாணவர்களும் அந்தப் பொறுப்பை ஏற்கத் தயாராக உள்ளார்கள் என்பதை இவ்வெழுச்சி விழா எடுத்துக் காட்டுகிறது.

மாணவர்களின் ஆர்வமும் பேரணியில் அவர்கள் எடுத்துச் சென்ற பதாகைகளும், அவற்றில் எழுதப்பட்ட வாசகங்களும் தற்போது நிலவும் அரசியல் யதார்த்தத்தை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. இது மாணவர்களின் அரசியல் வளர்ச்சியை காட்டுகிறது. ஊர்திகள் எமது போராட்டத்தின் அதிஉன்னத வளர்ச்சியையும் அது நவீன மயப்பட்டுள்ளதையும் துலாம்பரமாக எடுத்துககாட்டுபவையாக அமைந்திருந்தன.

விடுதலை விடிவு மிகஅண்மித்திருக்கும் வரலாற்றுக் காலத்தில் மாணவ சமுதாயத்தின் முழுப்பங்களிப்பும் மிக அவசியம். அதுவுமல்லாமல் நாம் பெறப்போகும் விடுதலையை தக்க வைக்கவேண்டிய பொறுப்பும் மாணவர்கள் கையிலேயே இருக்கிறது. அவர்கள் தான் நாளைய புதிய மனிதர்கள். பழமையைக் கைவிட்டு புதிய முன்னேற்றப்பாங்கில் எண்ணங்களை மாற்றி சுயநலமற்ற சமதர்ம ஜனநாயகத் தேசமொன்றை கட்டி எழுப்பி அதை தக்க வைக்க வேண்டியவர்கள் மாணவர்களே மாணவர் சக்தி மாபெரும் சக்தி.

# நாடாளுமன்றில் வார இறுதியில் யுத்தகால வரவு-செலவுத் திட்டம்

(கொழும்பு)

இவ்வார இறுதியில் நாடாளுமன்றத்தில் யுத்த கால வரவுசெலவுத்திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளது என்று 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டத்திலே ஆச்சரியமோ அதிர்ச்சி தரும் செய்திகளோ இருக்காது என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாடெங்கும் விழிப்புக் குழுக்களை அமைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா அரசாங்க கட்சி எம்பிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இதனால் சபை பல மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் உள்ளுராட்சி தேர்தல்களை பிற்போட்டதற்கான காரணங்கள் குறித்து அமைச்சர் ஒருவர் விளக்கமளிக்கையிலேயே எதிர்க்கட்சியினர் கூக்குரல் எழுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையும் காணி உறுதி வழங்கப்படாத 11,43,000 காணிகளுக்கு எட்டுமாத காலத்திற்குள் உறுதி வழங்கப்படும் என்று காணி அமைச்சர் நாடாளுமன்றில் உறுதியளித்தது குறிப்பிடத்தக்கது.

-ரி

# நிபந்தனை அற்ற இணைப்புக்கு அஷ்ரப் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணம் நிபந்தனையின்றி இணைக்கப்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதுபற்றி அதன் தலைவரும் அமைச்சருமான ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் தெரிவிக்கையில் முஸ்லிம்களின் நலன்களை பாதுகாக்கும் விதத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கு நாம் ஆதரவளிப்போம்.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு நிலையானதீர்வொன்று காணப்பட்டால் இன ரீதியான பிரச்சினைகளுக்கு அரசியலமைப்பில் கவனம்செலுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு கிழக்கு பகுதிகள் நிபந்தனையின்றி இணைக்கப்பட வேண்டுமென தமிழ் கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வேண்டுகோள் விடுத்திருப்பது தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே ஜனாப் அஷ்ரப் இவ்வாறு கூறியுள்ளார்

-சி

# பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையை நீக்க வற்புறுத்து

(கொழும்பு)

கேணல் அனுருத்த ரத்வத்த பிரதி பாதுகாப்பு அமைச்சராக கடமையாற்றுவதற்கு முன்னாள் முப்படை தளபதிகளும், முன்னாள் பொலிஸ் மா அதிபரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கேணல் ரத்வத்த முக்கிய அமைச்சுக்களான சக்தி மற்றும் மின்சாரத்தை தம் வசம் வைத்திருப்பதால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டுமெனவும் இவர்கள் கோரியுள்ளனர்.

பதவிச்சுமையால் கேணல் ரத்வத்தையால் பாதுகாப்பு அமைச்சு பதவியை சரிவரச் செய்ய முடியவில்லை என்றும் இது நாட்டில் தொடரும் யுத்தத்தை பெரிதும் பாதிக்கும் என இராணுவ ஆய்வாளர்களும் கூறியுள்ளனர். பாதுகாப்புக்கென தனி ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் அவருக்கு வேறு எந்த அமைச்சர் பதவியும் வழங்கக் கூடாதெனவும் வறபுறுத்தப்பட்டு வருகிறது.

- சி

# ஆஸ்திரேலிய அமைச்சரை சந்திரிகா சந்திக்காதது ஏன்?

[கொழும்பு]

இலங்கை வந்த ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் றேமன் சான்ஸை ஜனாதிபதி சந்திரிகா சந்திக்காதது இராஜதந்திர வட்டாரங்களில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திரு. றேமன் சான்ஸ் இந்து சமுத்திர பிராந்தியத்திலுள்ள பல நாடுகளுக்கு அண்மையில் விஜயம் செய்தபோது இலங்கையில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்த ஆஸ்திரேலியா உதவுமென கூறி இலங்கை வந்திருந்தார். அவர் இந்து சமுத்திர பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு சென்ற போதெல்லாம் அந்நாட்டின் தலைவர்களால் வரவேற்கப்பட்டதுடன் அவர்களும் இவருடன் முக்கிய சந்திப்புக்களை நடாத்தியுள்ளனர்.

எனினும் இலங்கைக்கு அவர் வந்தபோது அவரை ஜனாதிபதி சந்திரிகா சந்திக்கவில்லை, இதற்கான ஏற்பாட்டை வெளிவிவகார அமைச்சகம் ஏற்படுத்தாதது குறித்து இராஜதந்திர வட்டாரங்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளன. இவர் பிரதமர் சிறிமாவையே சந்தித்துள்ளார். இனப்பிரச்னை தீர்வுக்கு ஆஸ்திரேலியாவின் உதவியை வழங்க இவர் முன்வந்தபோதும் சந்திரிகா இவரை சந்திக்காதது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

-சி

## மண்ணெண்ணெ விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 24-வது தொடர் மண்ணெண்ணையை விநியோகித்துவருகின்றது.

25 ரூபா விலையில் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு இரண்டு லீற்றர் விதம் மண்ணெண்ணெ வழங்கப்பட்டுவருகின்றது.

மண்ணெண்ணெ இன்று வியாழக்கிழமைக்கு முன்பாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மேற்படி சங்க தலைவர் எஸ் செல்வரத்தினம் தெரிவித்தார்.

170

## எல்லைக் கிராம பாதுகாப்பு ஆராய விஷேட குழு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பு பற்றி ஆராய அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது,

இக்குழுவினர் வட-கிழக்கு எல்லைக்கிராமங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு அக்கிராமங்களின் பாதுகாப்பிற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவைபற்றி அரசுக்கு சிபார்சு செய்வதுடன் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள படைமுகாம்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது குறித்தும் சிபார்சு செய்யும்.

இக்குழுவில் எம். பிக்களான பற்றி திஸாநாயக்கா மைத்திரிமால சிறிசேன, எச். எம் வீரசிங்கசமரவீர வீரவன்னி, ஜானக தென்னக்கோன், சாந்த பிரேமரத்ன, பாலித்த திஸநாயக்க. மகிபால ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான முதல் சந்திப்பு அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்றது.

இக்குழுவினர் இவ்வாரம் முதல் எல்லைக்கிராமங்களுக்கு நேரடியாக சென்று தகவல்களை பெறுவதுடன் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பிற்கு உடனடியாக செய்ய வேண்டிய வசதிகள் குறித்தும் சிபார்சு செய்வர்,

- சி

## சென். ஜேம்ஸ் முதலிடம்

(கொழும்புத்துறை)

யாழ். கல்விக் கோட்ட ரீதியிலான தமிழ்த்திறன் போட்டிகளில் யாழ் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவர்கள் நடனப் போட்டிகளில் முதலிடங்கள் பலவற்றைப் பெற்றுள்ளனர்.

சாஸ்திரிய நடனம், கிராமிய நடனம், நாட்டுக்கூத்து ஆகியவற்றில் இம்மாணவர்கள் முதலிடங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

154

## பலதும் பத்தும்

### ஆக்கவும் அழிக்கவும்...!

ஆக்க வேலைகளுக்கு உதவும் அணுசக்தி அழிவுக்கும வித்திடுகிறது. ருஷ்யாவின் பாலைவனப் பிரதேசமாக இருந்த ஷெவ்சென்யோ இன்று செழிப்பான சோலைகள் உள்ள இடமாக மாறியுள்ளது இதற்கு உதவியது எது? அந்தப் பகுதியில் அணு மின் நிலையம நிறுவப்பட்டது,

அதனால் கிடைத்த மின் சக்தியால்... உப்பு நீரெல்லாம் நன்னீராக்கப்பட்டு... குடிப்பதற்கும், பயிர்களுக்குப் பாய்ச்சவும் உதவியது.

அதே ருஷ்யாவில்தான்... 1986 ஏப்பிரல் 26ல் அதிகாலை ... செர்னோபில் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட அணுஉலை வெடித்து... கதிர்வீச்சு மூலப் பொருள் காற்றில் கலந்ததால்... பெரும் பீதி ஏற்பட்டது. ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்தார்கள். ஆறு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டார்கள்.

''கரணம் தப்பினால் மரணம்'' என்பது அணுஉலை விவகாரத்திற்கும் பொருந்துமல்லவா?

— மயூரன்

## இராசி பலன்

08-06-1995

வியாழக்கிழமை

[தமிழுக்கு வைகாசி-25]

தசமி முன்னிரவு 7-47 வரை, அத்தம் முன்னிரவு 8-29 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 11-52 முதல் 1-22 வரை, சுபவேளை 4-22 முதல் 5-52 வரை.

மேஷம்: தன்னிலை உயர்வு, மனக்களிப்பு, பாராட்டு

இடபம்: பிறர் துன்பம், தொழில் நஷ்டம், அலைச்சல்.

மிதுனம்: பெற்றோர் கவலை, கடன் சுமை, வெறுப்பு.

கடகம்: தொழில் உறவு, சுபகாரியம், பயணம்.

சிங்கம்: வாக்குவாதம், மனைவி துயர், வேண்டாத உறவு

கன்னி: தியாக உணர்வு, பெரியோர் ஆசி, தெய்வீக செலவு.

துலாம்: நோய் வாய்ப்படல் நண்பர் பகை, மனச்சுமை.

விருச்சிகம்: தொழில்லாபம் பணவரவு, குடும்பசுகம்.

தனுசு: தந்திரோபாயம், காரியசித்தி, வாகனசுகம்.

மகரம்: அதிகாரிகள் துயர், வயிற்றில்ரோகம், கோப உணர்வு.

கும்பம்: எதிரிகள்வெறுப்பு, கடன்சுமை, யோசனை.

மீனம்: தற்பெருமை, பிறர் வெறுப்பு, சகோதர உதவி.

— ஜோஸ்யர்

குளத்தின் எருவும், குண்டை எருவும், தாவர எருவும் தாது எருவென நல்ல உரங்கள் நால்வகையாகும்

# போர் பற்றிய அரசின் பொய்ப்பிரசாரம் படையினரையே பெரிதும் பாதிக்கிறது

[கொழும்பு]

''ஈழப்போர் ஆரம்பமான பின் விடுதலைப்புலிப் போராளிகள் பலரைப் படையினர் கொன்றுவிட்டதாக கணக்குத் தரப்படுகிறது. இப்படியான தவறான கணக்குகள் தரப்படுவது, தப்பான வழிகளில் மக்களைக் கொண்டு செல்வதோடு தங்களைத் தாங்களே அழிக்கும் செயலாக அமைந்துவிடும்''

இவ்வாறு இக்பால் அத்தாஸ் 'சண்டே ரைம்ஸ்'க்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அதில் தெரிவித்திருப்பதாவது; இந்தப் போர் தொடங்கிய பின் புலிப் போராளிகள் 500 பேர் இறந்திருந்தால், அவர்களின் தொகையில் இருபதில் ஒரு பகுதியினரை இல்லாமல் செய்ததாகக் கருதலாம் இந்தக் கணக்கின்படி பார்த்தால் இன்னும் சில மாதங்களில் புலிகளை அழித்தொழித்து விடலாம் போல் இருக்கும் என ஒருவர் விகடமாகக் கூறினார்.

இந்தக்கணக்குகள் சரியென கூறஇயலாது. உண்மையான சுதந்திரமான கணக்கெடுப்பு இல்லை. ஏனெனில் இந்த கெரில்லாப் போர் இரண்டு தசாப்தமாக நடைபெறுகிறது.

இதேவேளை வடபகுதியில் ஆயுதப்படையினர் கடல், ஆகாய தொடர்புகள் அற்ற நிலையில் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அதே நேரம் தமது கட்டுப்பாட்டிலிருந்த கிழக்குப் பகுதியில்கூட புலிகளின் பலம் ஓங்குவதனாலும் கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

கிழக்குப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர படையினர் தற்போதைய பலம் போதாமல் கஷ்டப்படுகின்றனர். இதனால் வடபகுதியில் ஒரு தாக்குதலைத்தானும் தொடுக்க இயலாதுள்ளனர்.

இந்நிலையில் அரசியல் தலைவர்கட்கும், படை அதிகாரிகளுக்குமிடையில் ஆலோசனைகளும் கலந்துரையாடலும் இடம்பெறுவதோடு ஒற்றுமை நிலவவேண்டும்.

இராணுவத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் தீர்க்கப்படாத நிலையையே தொடரச் செய்யவுள்ளன. கேணல் ரத்வத்தையினால் மூன்றுமுறை கூட்டப்பட்ட கூட்டத்தில் இருபகுதியினருக்குமிடையே கருத்தொற்றுமை நிலவாமையே இராணுவ தலைமையில் மாற்றங்கள் ஏற்படுத்த நேரிட்டது.

அரசியல் தலைவர்களின் எண்ணக் கருத்துக்கு இராணுவம் ஒத்துவராமையாலேயே அண்மைய மாற்றங்கள் ஏற்பட்டன. போரில அரசியல்வாதிகளின் நோக்கை நிறைவுசெய்ய இந்த மாற்றங்கள் தேவையாக இருந்தன என்றும் அவர் அந்தக் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

[கே-சி[

## நுளம்பு தொல்லை அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். நகரப் பகுதிகளில் உள்ள வாய்க்கால் வடிகால்களில் குப்பை கூளங்கள் நிறைந்துள்ளதாலும், சில வாய்க்கால்களில் நீர் ஓடாது தடைப்பட்டு இருப்பதாலும் நுளம்பு உற்பத்தியாகியுள்ளது, இதனால் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது.

59

# தெற்கிலும் மிதிவெடிகளை நாட்டுவோம் எல்லாளன் படை எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் படையினர் தமிழ் மக்களை கேடயமாகப் பயன்படுத்தி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முயன்றால் தெற்கில் சிங்களப் பகுதிகளிலும், கொழும்பிலும் மிதிவெடிகளை வைக்க வேண்டிய நிலை ஏற்படுமென 'எல்லாளன்' படை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது

இதுகுறித்து எல்லாளன் படை அரசுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் எச்சரிக்கைக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது. அக்கடிதத்தில மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் மக்களை கேடயமாக பயன்படுத்துவதை படையினர் உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் எல்லாளன் படை கடும் நடவடிக்கை எடுக்கும், கொழும்பிலும், சிங்களப் பகுதியிலும் மிதிவெடிகளை நாட்டுவோம்:

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களை படையினர் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தமாட்டார்கள் என பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவிக்க வேண்டும் அவ்வாறு அரசு செய்யாவிடின் எல்லாளன் படை உடனடியாக குண்டுத் தாக்குதல்களை ஆரம்பிக்கும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. -சி

# கிழக்கில் சிறிய முகாம்களை தக்கவைக்க முடியாத நிலை

(கொழும்பு)

கிழக்கில் சிறிய படை முகாம்களை தொடர்ந்தும் தக்க வைத்திருக்க முடியாதென்பதை அண்மைக்கால புலிகளின் தாக்குதல்கள் நிரூபித்து வருவதாக 'சண்டே ஐலண்டின்' பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; கிழக்கில் தனித்தனியாக இருக்கும் கிராமங்களில் உள்ள படை முகாம்கள் புலிகளின் கடும் தாக்குதல்களுக்கு இலக்காவதால் வீணான உயிரிழப்பும், ஆயுத இழப்புமே ஏற்படுகின்றன. இதனால் இவற்றை மூடிவிடுவது சிறந்தது.

தற்போதைய நிலையில் கிழக்கில் தற்பாதுகாப்பு நடவடிக்கையே படையினருக்கு சிறந்தது. இராணுவத்தினர் புலிகளின் இடங்களை சென்று தாக்குவது நல்ல பயனைத் தரும். புலிகளின் தாக்குதலில் முகாமை பாதுகாக்கலாம் என எண்ணி தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது பெரும் இழப்பையே ஏற்படுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார்,

இதேவேளை புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி கிழக்கில் 200க்கும் மேற்பட்ட சிறிய படை முகாம்களை படையினர் மூடவுள்ளனர். இங்கிருந்த படையினர் பெரிய முகாம்களுக்கு மாற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -ரி

# படையினர் இழப்புக்களை மறைக்க அரசு தரப்பு பொய்ப் பிரசாரம்!

(கொழும்பு)

கடந்த மாதம் 31ம் திகதி விடுதலைப் புலிகளின் தாக்குதலில் திருகோணமலை கிரியாயில் கொல்லப்பட்ட லெப். கேணல் காமினிபெர்னாண்டோ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்படவில்லை என்ற விதத்தில் செய்திகளைச் சிறிலங்கா அரசு வெளியிட்டு வருகிறது.

இவர் புலிகளின் தாக்குதலில் காயமடைந்த போதிலும் மருத்துவமனையில் மாரடைப்பினால் இறந்ததாக அரசு தெரிவிக்கிறது.

தமது தரப்பிலான இழப்புக்களை மறைக்கவே இத்தகைய பிரசாரங்களை அரசு மேற்கொண்டு வருகின்றது.

புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட லெப். கேணல காமினி பெர்னாண்டோவுக்கு சிறிலங்கா அரசு இறப்பின் பின்னரான பதவி உயர்வாகக் கேணல் நிலையை வழங்கியுள்ளது.

இவ்வாறு அரசுத் தரப்பினர் பல தடவைகள் தமது தொடர்புச் சாதனங்கள் ஊடாகப் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. ரி

# காலியில் தமிழர்கள் மத்தியில் தொடர்ந்தும் அச்சமும், பீதியும்

(கொழும்பு)

காலியில் நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும், அங்குள்ள தமிழர்கள் பெரும் பீதியுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைக் குழுவின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் காலிக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட தமிழர்களைச் சந்தித்து உரையாடினர். அப்போது அவர்கள் பெரும் பீதியுடன் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது,

காலியில் இடம் பெற்ற வன்முறையை அடுத்து 400க்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் இடம் பெயர்ந்து ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அலவாங்கு, கத்தி, கோடரிகள் சகிதம் வந்த குழுவினரே தம்மைத் தாக்கியதாகக் காலியிலுள்ள எல்பிட்டிய மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை காலி நகரில் தமிழரின் நடமாட்டம் தற்போது காணப்படவில்லை என்றும் அவர்கள் இன்னும் பதற்றத்துடன் வாழ்ந்து வருவதாகவும் தெரிய வருகிறது.

பொலிஸார் பாதுகாப்பு வழங்குவதாகத் தெரிவித்துள்ளபோதிலும். இப்பகுதித் தமிழ்மக்கள் மீண்டும் தம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்துடன் காணப்படுகின்றனர் கி

# யாழ். ஆஸ்பத்திரியில் பல சேவைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவும் டீசல் தட்டுப்பாடு காரணமாக மின்சாரம் மட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேலும் பல சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

அதி முக்கிய செயற்பாடுகளில் ஒன்றான சத்திர சிகிச்சைகளும் தற்போது சத்திர சிகிச்சை நிலையத்தினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, அவசர சத்திர சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்சாரம் மட்டுப்படுத்தல் காரணமாக சத்திரசிகிச்சை நிலையத்தில் பாவிக்கும் உபகரணங்கள் மற்றும் பாவனை பொருள்கள் தொற்று நீக்குவதில் ஏற்பட்டுள்ள தாமத நிலையாலேயே அதிக பட்சம் சத்திர சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டதற்கான முக்கிய காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது, -90-கி

# விஷவாயு தாக்குதலை எதிர்கொள்ள அனுராதபுரத்தில் தீவிர பயிற்சி

[கொழும்பு]

விஷ வாயுத் தாக்குதல் ஒன்றை எதிர்கொள்வது தொடர்பாக அனுராதபுரம் வைத்தியசாலையில் பொது நடைமுறைப் பயிற்சி ஒன்று அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் அரசுப் படைகள் மீது விஷ வாயுக்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்திப் பாரிய உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தக்கூடும் எனப் பாதுகாப்புப் பகுதியினர் எதிர்பார்த்துள்ளனர்.

இதனை எதிர்கொள்வதோடு விஷ வாயுத் தாக்குதல ஒன்றைப் புலிகள் மேற்கொண்டால், அதனை எதிர்கொள்வதற்கு எவ்வாறு வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியர்கள், தாதிகள், உதவியாளர்கள் நடந்துகொள்ளவேண்டும் என்பது குறித்தும் வைத்தியசாலையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேலும் அதிரடி நடவடிக்கையாக வைத்தியநிலையங்களில் புலிகள் திடீர்த் தாக்குதல்களை நடத்தினால் வைத்தியர்களும் அபாய நிலையைச் 'சைரன்' மூலமாக அறிவித்து எவ்வாறு தற்காத்துச் செயற்படுவது என்பது குறித்தும் மேற்படி வைத்தியசாலையில் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி வழங்கப்பட்ட போது அனுராதபுரத்தில் புலி வந்துவிட்டது என்ற வதந்தி பரவி நகர மக்கள் சிறிது நேரம் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர் ரி

# அம்பாறை தமிழ்ப் பிரிவில் விவசாயச் செய்கைக்கு படையினர் கட்டுப்பாடு

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளில் விவசாயச் செய்கை பாதுகாப்புப் படையினரால் மட்டுப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் புராதன காலத்துக் குளங்களான கஞ்சிகுடிச்சாறு, றூபஸ்குளம், சமத்தக்குளம் என்பன பெரிய நீர்ப்பாசன வசதியளிக்கக் கூடிய குளங்களாகும். மேலும் 25 கிராமியக்குளங்களும் அப்பிரதேசத்திலுள்ளன.

இவ்வசதியிருந்த போதிலும் நாலாயிரம் ஏக்கருக்குமேல் அப்பகுதியில் நெற்செய்கை செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை:

பாதுகாப்புப் படையினர் தமது பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு பிரதானவீதிக் கரையிலுள்ள நெல் வயல்களை விட வேறு இடங்களில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதியாமையே இதற்கான முக்கிய காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றது. கி

# குற்றவாளிக் கூண்டில் இந்தியா

தலைவர் பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கை, இந்தியாவால் முன்வைக்கப்பட்டது முதல் பலரும் பலவிதமாக, நாடு கடத்தல் சட்டம், சார்க் நாடுகளிடையே அது பற்றிய இணக்கம் ஆகியவற்றின் நுணுக்கங்கள் பற்றி ஆராய்கின்றனர். இந்த ஆராய்ச்சி எங்களுக்குத் தேவைதானா?

யார் குற்றவாளிக் கூண்டில் நிற்பாட்டப்பட வேண்டும். இந்தியா கௌதம புத்தர் பிறந்த நாடு; காந்தி பிறந்த நாடு என்று பக்திப் பரவசத்தோடு பூசித்து, இந்தியத் தலைவர்களின் படங்களைத் தம் பூசை அறைக்குள் வைத்து வணங்கியவர்கள் ஈழத் தமிழர்கள். இந்திரா காந்தி இறந்தபோது இந்தியாவிலும் பார்க்க அதிக துக்கத்தையும், அஞ்சலியையும் செலுத்தியவர்கள் ஈழ மக்களே. அஞ்சலி நிகழ்வுகள் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.

இத்தகைய மதிப்பும், அபிமானமும் வைத்திருந்த ஈழ மக்களுக்கு ராஜீவ் செய்த கைமாறு என்ன? அமைதிப் படை என்ற போர்வையில், ஆக்கிரமிப்புப் படையை இலங்கைக்குள் அனுப்பினார். ஆறாயிரம் அப்பாவிப் பொது மககளும், இரண்டாயிரம் போராளிகளும் கொல்லப்பட்டனர். உடைமைகள் அழிக்கப்பட்டன. பெண்கள் கொடூரமான பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். கேட்பதற்கு ஆள் இல்லை. முறைப்படுவதற்கு இடம் இல்லை. பாலியல் வன்முறை வழக்கொன்று கொழும்பில் இந்தியப் படையினருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றில் சமூகமளிக்கும்படி வட பிராந்தியக் கொமாண்டர்களாக இருந்தவர்களில் ஒருவரான மஞ்ஜித்சிங் கோரப்பட்டார். அவர் மன்றின் முன் ஆஜராக மறுத்துவிட்டார். அத்தனை அகங்காரம். தாங்கள் ஒரு வல்லாதிக்க நாடு என்ற மமதை.

இவற்றிற்கெல்லாம் ஈழத் தமிழர்கள் என்ன செய்தார்கள்? நீதி கோரி, நியாயம் கோரி, தமது பாரம்பரியப் பிரதேசங்களில் சுதந்திரமாக வாழ்வதற்காகப் போராடியதுதான் அவர்கள் புரிந்த குற்றம்.

ஈழத் தமிழர் தமது நாட்டில் தம்மை அடக்கி, ஒடுக்கி அரசாளும் சிங்களப் பௌத்த பேரினவாதத்துக்கு எதிராகச் செய்து வரும் போராட்டத்தை, இந்தியா தன் சொந்த அரசியல் பொருண்மிய நன்மைகளுக்காகப் பாவித்தது. இப்போதும் பாவித்து வருகிறது. தான் தான் தெற்காசியப் பிராந்தியத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் விதத்தில் அது நடந்து வருகிறது.

**'ராஜா'**

அட்டூழியங்களை எல்லாம் புரிந்துவிட்டு, எங்களுக்கு இழைத்த அநியாயம் போதாது என்று யாரோ செய்த குற்றத்துக்காக எம் மீது அதர்மமான பழி சுமத்தி, நாடு கடத்தும் கோரிக்கையை முன்வைத்து, உலக அரங்கில் தமிழீழ மக்களுக்கும், அவர்களின் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தும் விடுதலைப் புலிகளுக்கும் அவமானம் ஏற்படுத்த எத்தனிக்கின்றது.

உண்மையில் குற்றங்கள் புரிந்தது இந்திய வல்லாதிக்கம்தான். அதைத்தான் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தவேண்டும். இரண்டாம் உலகப் போரின் பின்னர் போர்க் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டனர். அவ்விசாரணைகளை நியூறன் பேர்க் (Nuren burg) விளக்கங்கள் என்று அழைக்கப்பட்டன, யூதர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக அவற்றைப்புரிந்தவர்களை வருடங்கள் பல சென்ற பின்னரும் தேடிப்பிடித்து விசாரணைக்கு உட்படுத்தி தண்டனைகளை வழங்கினார்கள்.

சர்வதேச நீர்ப்பரப்பில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு கப்பலில் வந்து கொண்டிருந்த கேணல் கிட்டுவையும் ஒன்பது விடுதலைப்புலி வீரர்களையும் அதர்மமான முறையில் அழிப்பதற்கு வழி கோலியதும் இந்திய வல்லரசே. இக்குற்றங்களை எல்லாம் செய்துவிட்டு நல்லபிள்ளைக்கு நடிப்பதற்கு இந்தியா எத்தனிக்கிறது. எங்களுக்கும் இந்தியாவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? அதனிடம் அரச ஆதிக்கம் இருக்கிறது; எங்களையும் அரச ஆதிக்கம் உள்ளவர்களாக ஆக்கிக்கொண்டால் நாமும் அதற்குச் சரிசமனானவர்களே,

இன்று உலகில் சட்டத்துறை பல மாற்றங்களை அடைந்து வருகிறது புதியபரிமாணங்கள் சட்டத்துறைச் சிந்தனைகள் உருவெடுக்கின்றன. அமெரிக்காவில் முன்னாள் ஜனாதிபதி லிங்கனை கொன்றவனின் சந்ததியினர் அவனுடைய புதைகுழியை தோண்டி உண்மையில் அதற்குள் அடக்கப்பட்டிருப்பவர் தங்கள் மூதாதையர் தானாஎன்று நீதிமன்றில் மனுப் பண்ணியுள்ளனர். அவ்விதம் செய்து தங்கள் குடும்பத்துக்கு ஏற்பட்ட அபகீர்த்தியை இல்லாமல் செய்ய அவர்கள் எத்தனிக்கிறார்கள். இதுபோல் குற்றம் செய்து தண்டிக்கப்படாதுஇறந்தவரை புதைகுழியிலிருந்து மீட்டெடுத்து விசாரணையின் பின் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே குற்றம் செய்தது தனிமனிதனானாலும்சரி ஒரு நாடாக இருநதாலும் சரி தண்டிக்கப்படத்தான வேண்டும். காலம் கடந்தாகிலும் தண்டனை வழங்கப்படத்தான் வேண்டும். குற்றம் செய்தது இந்தியாவும் அதன் தலைவர்களுமே.

தமிழர்களின் போராட்டம் நேர்மையானது நீதியானது அதர்மம் செய்தவர்களுக்கு எதிராகத்தான் அவர்கள் போர் தொடுத்திருக்கிறார்கள், ஆகவே அவர்கள் குற்றவாளிகள் அல்லர் தேவையில்லாது அலட்டிக்கொள்ளவும் தேவையில்லை.

## தாய் மண்ணை மீட்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது மண் எதிர்நோக்கும் பாரிய பிரச்னை குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறை வெளியிட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:

வடபுலம் மீது ஒரு பாரிய படையெடுப்பைமேற்கொள்ள சிங்களஇராணுவம் தயாராகி வருவதாக உலகச்செய்தி நிறுவனங்கள் அபாயமணி அடித்துள்ளன. இத்தகையதொரு படையெடுப்பை வெற்றிகரமாக நடாத்தும் நோக்குடன் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும்; பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்தையும் முயன்றபடி உள்ளனர். ஆயுதக் கொள்வனவுக்கென வெளிநாடுகளுக்குச் சென்ற இராணுவ உயர் அதிகாரிகள் கொழும்பு திரும்பிவிட்டனர். இன்னும் ஒரு சில தினங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத தளபாடங்கள் கொழும்பை வந்தடைந்துவிடும். அவை வடபுலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் வடபுலம் மீதான படையெடுப்பை அரச படைகள் தொடங்க இருக்கின்றன.

இத்தகையதொரு படையெடுப்பு யாழ் குடா நாட்டிற்குள்ளா? அல்லது வன்னிப பெரு நிலத்திலா? அல்லது ஒரே சமயத்துல் இரண்டு இடங்களிலுமா? நடைபெற இருக்கிறது என இப்போது உறுதியாகக் கூற முடியாதுள்ளது ஆயினும் குடாநாட்டை ஆக்கிரமிப்பதிலேயே சிங்கள அரசு குறியாக இருக்கின்றது. எது எப்படியோ புதிய அரசு என்ற வகையில் ஒரு பாரிய படையெடுப்பை நடாத்தும் உறுதியுடன் சந்திரிகா அரசு உள்ளது என்பது மட்டும் உண்மை. அத்துடன் குறித்த அப்படையெடுப்பை மழை காலம் தொடங்க முன்னர் முடிக்கவேண்டும் என்றும் அது திட்டமிட்டுள்ளது.

ஏனைய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களால குடாநாடு நிரம்பிவழிகின்றது என்று சிங்கள அரசுக்குத் தெரியும். இந்த நிலையில் குடாநாடு மீது ஒரு பாரிய படையெடுப்பை நடாத்துவது என்று சிங்கள அரசு முடிவெடுத்தால் அது நிட்சயமாக ஒரு இன அழிப்பை நோக்காகக் கொண்டதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. தடை செய்யப்படாத பொருட்களுக்கும் இப்போது தாண்டிக்குளத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது; உணவு, மருத்துவப்பொருட்களும் பலத்த கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன. அரசின் இந்தச் செயல்கள் ஒரு பாரிய படையெடுப்பிற்கான முன்னேற்பாடுகள் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள முடியாது.

வடபுலம் மீதான படையெடுப்பு என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. இப்போது கேள்வி எதுவெனில் அது எப்போது என்பதே ஆகும்.

இந்தநிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் என்னசெய்ய வேண்டும்?

சிங்கள அரசின் படையெடுக்கும் திட்டத்தை செயற்படவிடாது தடுக்கும் அதிகாரம் தமிழ் மக்களுக்கு இல்லை, ஆனால் படையெடுப்பை முறியடித்து, சிங்களப் படைகளுக்கு ஒரு பாடம் புகட்டும் சக்தி தமிழ் மக்களுக்கு உண்டு. புலிகள் இயக்கத்தின் ஆட்பலத்தை அதிகரிப்பதன் மூலம் அந்த சக்தியை பெற்றுக் கொள்ளும் வலு தமிழினத்திற்கு உண்டு.

அண்மைக் காலமாக கணிசமான அளவில் இளைஞர்களும், இளம் பெண்களும் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். இது போராட்டத்திற்கு பலத்த நம்பிக்கையைத் தந்துள்ளது. இப்புதிய போக்கு மேலும் வளர்ச்சிபெற்று, ஆயிரக் கணக்கில் எமது இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில் இணையும் போது, நிட்சயமாக, தமிழர் படைபலம் பெருவளர்ச்சியடையும். அத்தகையதொரு படைபலம் வளர்ச்சியானது சிங்களப் படையெடுப்பிற்கு தகுந்த பாடத்தைக் கற்பிக்கும் என்பது திண்ணம்.

இதேவேளை எமது இளம் சமூகம், தாமாகவே விரும்பி முன்வந்து, இயக்கத்தில் இணைந்து கொள்ளும் செயலை சிலர் கொச்சைப்படுத்த முயல்வதையும் காணக்கூடியதாக உள்ளது. அதாவது 'பலவந்தப்படுத்தியே இயக்கத்திற்கு ஆட்கள் சேர்க்கப்படுகின்றனர்' என்று தப்பாக பிரச்சாரம் செய்வதுடன் தமது கருத்தை நியாயப்படுத்துவதற்காக சில கற்பனையான சம்பவங்களை உருவாக்கி, அவற்றை வதந்திகளாகப் பரப்புவதையும் காணக் கூடியதாக உள்ளது. உண்மையில் நாம் எவரையுமே கட்டாயப்படுத்தி இயக்கத்தில் இணைக்கவில்லை என்பதை எமது மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்,

ஒரு தேசவிடுதலைப் போராட்டத்தில், விடுதலைச் சேனைக்கான ஆட்பலத்தை, குறித்த அந்த மக்கள் திரளிலிருந்து திரட்டுவதே வழமை. எதிரியின் ஆக்கிரமிரப்புச் செயலை சுட்டிக் காட்டி- எதிர்ப்படைகளின் அராஜகங்களை விளக்கி விடுதலையின் அவசியத்தை உணர்த்தி விடுதலைப் படைக்கான ஆட்களை திரட்டுவது தான் உலக வழமை. இந்த வழமைக்கு முரணாக புலிகள் இயக்கம் எதையும் செய்யவில்லை. இதே வேளை ஒரு தேசிய நெருக்கடி ஏற்படும்போது தேசத்தைக் காப்பதற்காக தனது குடிமக்களை கட்டாய இராணுவ சேவைக்கு அழைக்கும் வழமை உலகத்தில் உண்டு, அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளில் இதை அதிகாரபூர்வமாகச் செய்வதற்காக சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் இவ்விதமான கட்டாய ஆட்சேர்ப்பில் புலிகள் இயக்கம் இது வரையில் ஈடுபடவில்லை. அவ்விதமும் ஈடுபட வேண்டிய அவசியமும் இது வரை எழவில்லை. காலத்துக்குக்காலம் எமது இளைஞர்கள் இளம் பெண்கள் தாமாகவே முன்வந்து இயக்கத்தில் இணைந்து தமிழரின் படைபலத்தை அதிகரிப்பதற்கு துணை செய்கின்றனர் என்பதே உண்மையாகும்.

இது ஒரு புறமிருக்க போராட்டத்திற்கான ஆட்சேர்ப்பையும்- மாணவர்களின் கல்வியையும் சிலர் ஒன்றாகப் போட்டுக் குழப்பும் செயலையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தளவில் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இந்தப் போர்ச் சூழலிலும். கல்விக்கு இடைஞ்சல்கள் வராது, மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு இயக்கம் உறுதுணையாக இருக்கின்றது. சிறிலங்காவின் அரசியல்வாதிகளே, உதாரணம் காட்டிப் பேசுமளவிற்கு தமிழ் மாணவர்களின் கல்வியிற் புலிகள் இயக்கம் அக்கறைகாட்டி வருகின்றது. தமிழீழ கல்விக் கழகம், மாணவர் அமைப்பு தமிழீழ கல்வி மேம்பாட்டுச் பேரவை, அறிவியற்கழகங்கள் ..என எமது மாணவர்களின் கல்வியை அதற்கான நிருவாகத்தைதிறம்படநடாத்துவதற்காக பல அமைப்புக்களை நிறுவி கல்விக்கு இயக்கம் ஊக்கம் கொடுக்கின்றது. அத்துடன் கல்வியில் சிறந்துவிளங்கும் மாணவர்களுக்கு தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசில்கள் வழங்க தனது பிரத்தியேக அக்கறையையும் காட்டி வருகின்றார். எமது இனத்தின் வாழ்க்கையைப் பொறுத்தளவில் கல்வியும்-போராட்டமும் பிரிக்கமுடியாத இரண்டு அம்சங்களாகிவிட்டன. கல்விக்கு போராட்டம் காப்பரணாக விளங்கும் அதே வேளை, போராட்டத்திற்கு கல்வி கவசமாகவும் விளங்க வேண்டும். கல்விக்கு நாம் ஊக்கங்கொடுக்கும் அதேவேளை கல்வியா! போராட்டமா! என்று ஒரு மாணவன் தெரிவு செய்ய முயல்வதை நாம் தடுக்கமாட்டோம்.

போராட்டத்தின் அத்தியாவசிய தேவை பற்றி மாணவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்கின்றோம் என்பது உண்மையே .. ஆனால் அதை கல்விக்கு எதிரான நிலைப்பாடாக எவருமே கருத முடியாது. அதேபோல கல்விக்கு ஆதரவாக நாம் எவ்வளவோவேலைத் திட்டங்களை மேற்கொள்கின்றோம். ஆயினும் அதைப் போராட்டத்திற்கு புறம்பான ஒன்றாக எவரும் நோக்கமுடியாது. எமக்குக் கல்வியும் தேவை, போராட்டமும் தேவை, இதில் எதைத்தேர்ந்தெடுப்பது என்று முடிவெடுக்கும் உரிமையை மாணவர்களிடமே விட்டுள்ளோம்.

இதேவேளை மறுபுறத்தில் எமது மக்களை துன்புறுத்தவென்றும், எமது மண்ணை ஆக்கிரமிக்கவென்றும் ஆயிரக் கணக்கான சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்தவண்ணம் உள்ளனர். சிங்கள அரசின் படைபலப் பெருக்கத்திற்கு இணையாக புலிகள் படைபலமும் உயர்வடையாதுவிட்டால் தமிழ் மக்கள் எத்தகைய அவலத்தைச் சந்திப்பார்கள் என்பது எங்கள் அனைவர்க்கும் தெரியும். எனவே தான் சிங்களப் படை பெருக்கத்திற்கு இணையாகப் புலிகளின் படை பலத்தையும் வளர்த்தெடுக்க வேண்டிய அத்தியாவசியததேவை எம்முன் இருக்கின்றது. இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்றவே இப்போது நாம் ஆட்சேர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். எமது இயக்கத்தின் ஆட்சேர்ப்பு மையங்களாக அரசியல் துறையினரின் மாவட்ட, கோட்ட சிற்றூர் அலுவலகங்கள் இயங்குகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -சி

## சந்திரிகாவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஆலோசனை வழங்குவதுடன் சில பகுதிகளின் பாதுகாப்பு குறித்தும் ஆலோசனை வழங்குவார்கள்.

வடக்கு-கிழக்கு போர்குறித்தும், படையினருக்கு ஆலோசனை வழங்கவுமென பல நாடுகளைச் சேர்ந்த 150 இராணுவ நிபுணர்கள் தற்போது இலங்கை வந்து சேர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. -சி


## தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சைகள்- 1994

1995 - 5 - 16 ம் திகதி நடைபெறுவதாக இருந்த பயிற்சி நெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகள், 1995 - 06 - 18 ம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் 1995 - 06 - 16 ம் திகதி தங்கள் பகுதித் தலைவரிடம் தமது மாணவர் பிரவேச அனுமதிச்சீட்டைச் சமர்ப்பித்து உரிய பரீட்சை அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகிறேன்.

கே. ஜெயரெட்ணம்
அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1995 - 06 - 07

[ ஏ- 4998 ]

# ஜனாதிபதி செயலகத்தை பாதுகாக்க காலிமுக கடலில் பீரங்கிப் படகுகள்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தையும், துறைமுகத்தையும் பாதுகாக்கும் நோக்கில் காலிமுகக் கடற்பகுதியில் பீரங்கி கப்பல்களின் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற கட்டிடத்திலேயே தற்போது ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ளது. இக்கட்டிடம் காலிமுக கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. இதன் மீது விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சம் அதிகரித்துள்ளதாலே பீரங்கிக் கப்பல்களின் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்த கடற்பகுதியில் ரோந்தில் ஈடுபட்டு வந்த பீரங்கி படகுகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதே போன்று கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென விசேட பாதுகாப்பு திட்டமும் வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -சி

## வெளிநாட்டு சேவையாளர் கிழக்கிலிருந்து வெளியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் வெளிநாட்டவர்களை உடனடியாக கொழும்பு திரும்புமாறு சம்பந்தப்பட்ட வெளிநாட்டுத் தூதரகங்கள் கேட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனமொன்று படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளமை கிழக்கில் தாக்குதல், தேடுதல் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளமை ஆகியனவே இம்முடிவுக்கான முக்கிய காரணமெனக் கூறப்படுகின்றது.

இதனால் குவாக்கர்பீஸ், கனேடிய உலக பல்கலைக்கழக நிறுவனம், நோராட் போன்ற பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றிய வெளிநாட்டவர்கள் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு திரும்பியுள்ளனர். கி-சி

## வடபகுதியிலிருந்து படையினரின் கடிதங்கள் வீடுகளுக்கு செல்வதில்லை

(கொழும்பு)

வடபகுதி முகாம்களில் உள்ள படையினரிடமிருந்து அவர்களின் வீடுகளுக்கு கடிதங்களோ, தகவல்களோ வருவது மிகக் குறைவாகவே உள்ளதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

இருந்தபோதிலும் சில கடிதங்கள், வவுனியாவுக்கு வந்துள்ளன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டபின் வேறு விமானங்கள் எதுவும் பலாலிக்கு வராமையே இதற்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. ம சி

# பொல்கொட வாவியில் மிதந்த இளைஞர் நால்வரின் சடலங்கள்

(கொழும்பு)

பொல்கொடைப் பகுதியில் வாவி ஒன்றில் மிதந்து வந்த இளைஞர்கள் நால்வரின் சடலம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது;

இச்சடலங்களின் உடல்களில் சில அவயவங்கள் தாக்கிச் சேதப்படுத்தப்பட்ட நிலையில் உடல்கள் கட்டப்பட்டு வாவியில் வீசப்பட்டுள்ளன. இச்சடலங்கள் பழுதடைந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு சடலங்கள் கடந்த புதன்கிழமையும், மற்றைய இரு சடலங்களும் வியாழக்கிழமையும் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச்சடலங்கள் அடையாளம் காண்பதற்காக கொழும்பு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## இலங்கை நிலைமையை இந்தியா அவதானிக்கிறது

(புதுடில்லி)

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தற்பொழுது காணப்படும்நிலையை இந்தியா மிகவும் உன்னிப்பாககவனித்து வருவதாக இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

'ரைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தித் தாளுக்குதிரு முகர்ஜி வழங்கிய செவ்வியொன்றிலேயே இதனைத்தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்; இலங்கையின் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் நவீனஆயுதங்களைக் கொண்டு தற்போது படையினரைத் தாக்கிவருகின்றனர். இது இந்தியாவைக் கவலைகொள்ள செய்துள்ளது.

எனினும் இந்தப் போரில் இந்தியத் தலையீடு ஒருபோதும் இருக்கமாட்டாது. இலங்கை அரசு இத்தகைய வேண்டுகோள் எதனையும் விடுக்கவில்லை.

வடக்கு கிழக்கு பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஐக்கிய இலங்கைக்குள்ளான ஒரு தீர்வையே இந்தியா விரும்புகின்றது எனவும் குறிப்பிட்டார். கி-சி

## சம்பளக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்குரிய மே மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் இன்று 8ம். நாளை 9ம் திகதிகளில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படுமென கூட்டுத்தாபன கணக்காளர் திரு. க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்,

## கப்பலினுள் நீர் புகுந்தது பயணிகளுடன் வந்த நரோமா தப்பியது

(ஆனைப்பந்தி)

தீவகத்தில் இருந்து பயணிகளை ஏற்றிவந்த 'நரோமா' கப்பல கடலில் மூழ்கிவிடும் பேராபத்திலிருந்து மயிரிழையில் தப்பியது: அண்மையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

'நரோமா' கப்பல் தீவகப் பயணிகளை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்தபோது திடீரென கப்பலின் வேகம் வெகுவாக குறைந்ததையடுத்து கப்பல் பணியாட்கள் இதற்கான காரணத்தை ஆராய்ந்தபோது கடல் நீரை உள்ளிளுத்து சூடாக்கி வெளியேற்றுகின்ற குழாயொன்றில் ஏற்பட்ட கோளாறினால் இயந்திர அறையினுள் கடல்நீர் அளவுக்கதிகமாக உட்புகுந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பயணிகளுக்கு மிதவைகள் வழங்கப்பட்டதாகவும் கப்பல் கப்டனின் தீவிர முயற்சியால் நீர் ஒருவாறு வெளியேற்றப்பட்டு தாங்கள் இப்பேராபத்திலிருந்து தப்பிக்கொண்டதாகவும் இக்கப்பலில் வந்த பயணிகள் தெரிவித்தனர். 101 சி

# வெளிநாட்டு நிபுணர்கள் தயாரித்த போர் திட்டத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கை கைப்பற்றுவதற்கான திட்டத்தை வகுக்கும் பொறுப்பை பிறநாட்டு இராணுவ ஆலோசர்களிடம் அரசு ஒப்படைத்துள்ளதை இராணுவ உயர்மட்டத்திதுள்ள ஒருபிரிவினர் எதிர்த்துள்ளதாக கொழும்புத் தினசரியொன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

வடபகுதி மீதான இராணுவ நடவடிக்கைகளுக்கான ஒரு திட்டத்தை தற்பொழுது பிரான்ஸ் நாட்டு இராணுவ நிபுணர்களுடன் பதினெட்டு இஸ்ரேலிய இராணுவ நிபுணர்களையும் கொண்ட ஒரு வெளிநாட்டுக் குழு தயாரித்து வருகின்றது.

யார் திட்டத்தை தயாரித்தாலும் முன்னால் போகப் போவது நமது படையினரே. இலங்கையைப் பற்றிய விபரங்கள் தெரியாதவர்கள் தயாரிக்கும் திட்டத்தை நம்பி நாம் எப்படிப்போவது என இராணுவ உயரதிகாரிகள் கூறிவருகின்றனர் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது: கி சி

## படையினர் பதில்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 3ம் திகதி தொடக்கம் எதிர்வரும் 14ம் திகதிவரை நடைபெறுவதற்கு அனுமதி பெறுவதற்கு படையினரிடம் அனுமதி கோரியபோது திருவிழாவில் பங்கு கொள்ளும் பக்தர்களை இராணுவம் நிலைகொண்டுள்ள இடத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் நடமாடக் கூடாது எனப் பலாலி இராணுவ அதிகாரியிடமிருந்து, அரசாங்க அதிபருக்கு தகவல் கிடைத்துள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். 162-சி

## பாரிய

[1ம் பக்கத்தொடர்ச்சி]

இம்மாதம் நடாத்த படையினர் திட்டமிட்டுள்ளதாக படை வட்டாரங்கள் கூறுகின்றன. எனினும் இராணுவ உயரதிகாரிகளிடையே பதவி நிலை குறைப்பு தொடர்பாக கடும் அதிருப்தி நிலவுகிறது.

தாக்குதல்கள் நடைபெறும் பகுதிகளைச் சேர்ந்த பன்னிரண்டு மேஜர் ஜெனரல்கள் புலிகளுக்கெதிரான தாக்குதல்கள் குறித்து நடவடிக்கை எடுக்கும்முயற்சியில் இதுவரை இறங்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியங்களை வெளியிட முடியும் என்பதாலே இவ்வாறு ஆலோசிக்கவில்லை என குறிப்பிட்டார்.

இதுபற்றி அமைச்சர் ரத்வத்தை அமைச்சரவைக்கு தெரிவிக்கையில்: இராணுவ தந்திரோபாயங்கள் அனைத்தும் பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் இதுபற்றி ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பார் எனவும் கூறியதாகவும் தெரிவித்துள்ளது. சி

## நாடாளுமன்றின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது. பத்திரிகையாளர்கள் நாடாளுமன்ற கட்டிடத்திலிருந்து தூர இடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டு அங்கிருந்து பாதுகாப்பு படையினரின் வாகனம் ஒன்றில் நாடாளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களும் மிகத் தீவிரமாகப் பரிசோதிக்கப்பட்ட பின்பே உள்ளே அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -ம-சி

## கட்டுநாயக்கா

(1-ம பக்கத் தொடர்ச்சி)

மையில் நான்கு லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்தார் என்று தெரிய வந்துள்ளது. இந்த வானின் முதலாவது உரிமையாளராக இருந்த சிங்களவர் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்ட சமயம் இந்த தகவல் தெரிய வந்ததாம்.

அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர்கள் நேற்று விசாரணைகளை நடத்துவதற்கு சம்பவம் நடந்த இடத்திற்கு விஜயம் செய்திருந்தனர். தூர இடத்திலிருந்து இயக்கி அந்தக் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதும் கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பல பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குழு. அல்லது நபர்களை இனங்காண்பதற்கு விசாரணைகளின் போது கவனம் செலுத்தப்படுகிறது என பொலிஸ் தலைமை அலுவலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏதும் குறைபாடுகள் நடந்திருக்குமா என்பது பற்றியும் விசாரணையில் கவனிக்கப்படும்.

வெடிமருந்துப் பொருட்கள் அடங்கிய வான்கட்டுநாயக்கா விமான நிலைய தரிப்பிடத்திற்கு கடந்த திங்கட்கிழமை இரவு 8-15க்கும் 8-30மணிக்கும் இடையில் பிரவேசித்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது, இத்தக் குண்டு வெடிப்பிற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் இரு நபர்கள் வாகனத்திலிருந்து வெளியேறியிருந்ததாகவும் தெரியவந்துள்ளதாம்.

சந்தேக நபர்களை கைது செய்வதற்கு சில பொலிஸ் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன சி-கே-வி-

நகத்து நுனியின் அழுக்கினைப்போல்
நாமறியமல் ஒழிந்திருப்பான்
அகத்திற் பயத்தை விளைவு செய்து
அந்நியர் சந்தையில் விலைக்கு விற்பான்
தேவின் கிருமியே
தேசத்தின் உளவாளி

மறுஅறிவித்தல்வரை
## படகுச்சேவை இல்லை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகு சேவை மறு அறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence B/1683613.